வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேணிபழனி

தேதி 16.1.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இஸ்ரோ விஞ்ஞானிகள், Space Docking தொழில் நுட்பம் சார்ந்த SpaDex திட்டத்தின் கீழ், 2 செயற்கை கோள்களை விண்ணில் வைத்தே ஒருங்கிணைத்து, புதிய சாதனை படைத்துள்ளனர்.

நாட்டில் ஸ்டார்ட்-அப் கலாச்சாரத்தை ஊக்குவிக்க, அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு, 8-ஆவது சம்பளக் கமிஷன் அமைக்கப்படுவதாக மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது.

காரைக்காலில், 4 நாள் காரைக்கால் கார்னிவெல் விழா மற்றும் மலர் **கண்காட்சி**, இன்று தொடங்கி உள்ளது.

இஸ்ரோ

விண்வெளி நிலையங்களை விண்ணில் வைத்தே கட்டமைக்கும் வகையிலான Space Docking தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட SpaDex இயக்கத்தின் கீழ், Chaser, Target ஆகிய 2 செயற்கை

கோள்களை, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட பாரதிய Docking கட்டமைப்புடன் விண்ணில் வைத்தே ஒருங்கிணைத்து, இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம், முக்கிய மைல் கல் ஒன்றை எட்டி உள்ளது. இதன் மூலம் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்த நவீன தொழில் நுட்பத்தை வெற்றிகரமாக பயன்படுத்தும் 4-ஆவது நாடாக இந்தியா மேம்பட்டுள்ளது. Micro-Gravity என்னும், நுண்நிலை புவியீர்ப்புச் சூழலில் கனரக கட்டமைப்புகளை ஒருங்கிணைக்கவும், செயற்கை கோள்களுக்கு சுற்றுப் பாதையில் வைத்தே மறு எரிபொருள் வழங்கவும் Docking தொழில் நுட்பம் மிக அவசியம் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*முர்மு-வாழ்த்து*

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் SpaDex சாதனையை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பாராட்டி உள்ளார். இந்த வரலாற்று சாதனைக்காக அனைத்து இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கும் அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார். நவீன தொழில் நுட்பத்தின் வெற்றிகரமான பயன்பாட்டினால், இந்தியாவின் விண்வெளித் திறன்கள் வலுப்பெற்றுள்ளதாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். சந்திரயான் 4, ககன்யான் மற்றும் விண்வெளி நிலையம் தொடர்பான இந்தியாவின் எதிர்காலத் திட்டங்களுக்கு வழிவகுப்பதாக இந்த சாதனை அமைந்திருப்பதாகவும் குடியரசு தலைவர் கூறி உள்ளார்.

*குடியரசு தினம்*

வரும் 26-ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெற உள்ள 76-ஆவது குடியரசு தின விழாவில் இந்தோனேசிய அதிபர் திரு பிரபாவோ சுபியந்தோ, தலைமை விருந்தினராக கலந்து கொள்கிறார். இதற்கென, பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில், அவர், வரும் 25, 26 ஆகிய தேதிகளில், இந்தியாவிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார். இருதரப்பு உறவுகளை விரிவாக மறு ஆய்வு செய்யவும், பரஸ்பர அக்கறை உள்ள பிராந்தியம் மற்றும் சர்வதேச பிரச்சனைகளை விவாதிக்கவும் வாய்ப்பாக இப்பயணம் அமையும் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கை மற்றும் இந்தோ-பசிபிக் கொள்கையில், முக்கிய தூணாக இந்தோனேசியா திகழ்வதும், இந்தோனேசிய அதிபராக பதவி ஏற்றது முதல், திரு பிரபாவோ இந்தியா வருவது, இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத் தக்கது.

*ஸ்டார்ட்-அப்-மோடி-*

நாட்டில் ஸ்டார்ட்-அப் கலாச்சாரத்தை ஊக்குவிக்க, அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று ஸ்டார்ட்-அப் இண்டியா இயக்கத்தின் 9-ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் இவ்வாறு கூறி உள்ளார். அரசின் இந்த புரட்சிகரமான இயக்கத்தினால் கடந்த 9 ஆண்டுகளில் எண்ணற்ற இளைஞர்கள் தங்களின் புதுமையான

தொழில் உத்தேசங்களை வெற்றிரமான ஸ்டார்ட்-அப் நிறுவனங்களாக மாற்றி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். பிரதமரின் பதிவு குறித்து, மேலும் சில விவரங்கள்...............

**(வாய்ஸ்)**

*ஸ்டார்ட்-அப்-மோடி-2(12)*
**(வாய்ஸ்)**

நாட்டில் வர்த்தகம் புரிவதை எளிதாக்க அரசின் கொள்கைகளில் முக்கிய கவனம் செலுத்தப்படுவதால் இளம் தொழில் முனைவோர் தொழில் ஆதாரங்களை எளிதில் அணுக முடிவதாகவும், இதனால் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் மிகுந்த பயன் பெறுவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இளைஞர்கள் தைரியமாகத் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்கவே, நாடு முழுவதும் புதுமையாக்க மையங்கள் மற்றும் இன்குபேஷன் மையங்களை அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா தற்போது, துடிப்பான, தன்னம்பிக்கை நிறைந்த, எதிர்கால சவால்களுக்கு ஏற்ற நாடாகத் திகழ்வதையே, ஸ்டார்ட்-அப் இண்டியா இயக்கத்தின் வெற்றி, வெளிப்படுத்தி இருப்பதாக பிரதமர் கூறி உள்ளார். இந்திய இளைஞர்கள் ஒவ்வொருவரும், ஒரு ஸ்டார்ட்-அப் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

*வாகன கண்காட்சி*

நவீன போக்குவரத்து வசதிகள் பற்றிய பாரத் மொபைலிட்டி உலக கண்காட்சியை, பிரதமர் திரு நரேந்திர மோடி, புதுடெல்லியில் நாளை திறந்து வைக்கிறார். 2070-ஆம் ஆண்டிற்குள் நிகர கார்பன் புகை வெளியீட்டை பூஜ்யமாக குறைப்பதான பிரதமரின் தொலை நோக்கு பார்வையை எட்டுவதில், முக்கிய நடவடிக்கையாக இக்கண்காட்சி அமைவதாக, மத்திய கனரக தொழில் துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். மின்சார வாகன உற்பத்தியாளர்களை அரசு ஊக்குவித்து வருவதாகவும், மின்சார வாகன உற்பத்தி துறையை திறம்பட்ட துறையாக மேம்படுத்த, தனி கவனம் செலுத்தப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். முன்னதாக மகீந்திரா நிறுவனத்தின் மின்சார வாகனத்தில் அமைச்சர் பயணம் செய்தார்.

*சம்பளக் கமிஷன்*

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு, 8-ஆவது சம்பளக் கமிஷன் அமைக்கப்படுவதாக, மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார். 7-ஆவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளின் அமலாக்க காலம் முடிவடையும் முன்பாக, 8-ஆவது சம்பளக் கமிஷன் இப்போதே

அமைக்கப்படுவதால், கமிஷனின் பரிந்துரைகளைப் பெற போதிய அவகாசம் கிடைக்கும் என அவர் கூறினார். 8-ஆவது சம்பளக் கமிஷனின் தலைவர் மற்றும் 2 உறுப்பினர் பதவிகளுக்கு, விரைவில் நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

*காரைக்கால்-கார்னிவெல்*

காரைக்காலில், மாவட்ட நிர்வாகமும், புதுச்சேரி அரசின் கலை-பண்பாட்டு துறை, சுற்றுலாத் துறை மற்றும் வேளாண் துறையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள காரைக்கால் கார்னிவெல் விழா மற்றும் மலர் கண்காட்சி, இன்று தொடங்கி உள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்...............

(வாய்ஸ்)

*காரைக்கால்-கார்னிவெல்*

**(வாய்ஸ்)**

கார்னிவெல் விழா தொடங்குவதைக் குறிக்கும் வகையில், காரைக்காலில் இன்று நடைபெற்ற கலாச்சார சாலை ஊர்வலத்தை குடிமைப் பொருள் வழங்குத் துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர் திரு நாஜீம், மாவட்ட ஆட்சியர் திரு சோமசேகர் அப்பாராவ் ஆகியோர், கொடி அசைத்து தொடக்கி வைத்தனர்.

உள்ளூர் கலைஞர்களின் பொம்மலாட்டம், கரகாட்டம், தப்பாட்டம், மயிலாட்டம் மற்றும் வெளிமாநில கலைஞர்களுக்கு கலாச்சார

நடனங்களும் ஊர்வலத்தில் இடம் பெற்றன. காசநோய் விழிப்புணர்வு இயக்கம், பிரதமரின் சூரியகர் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்கள் மற்றும் இயக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வு ஊர்திகளும் ஊர்வலத்தில் பங்கேற்றன. காரைக்கால் மாவட்ட வருவாய் பிரிவு துணை ஆட்சியர் திரு அர்ஜுன் ராமகிருஷ்ணன், முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி லட்சுமி சவுஜன்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 4 நாட்களுக்கு நடைபெறும் காரைக்கால் கார்னிவெல் விழாவில், புகழ் பெற்ற கலைஞர்கள் வழங்கும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. வேளாண் திருவிழா, உணவுத் திருவிழா மற்றும் நாய்கள் கண்காட்சி உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,

காரைக்காலில், கார்னிவெல் விழாவின் மற்றொரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, விளையாட்டுப் போட்டிகளை, குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன் இன்று காலை தொடக்கி வைத்தார். இப்போட்டிகளில் பங்கேற்கும் மாணவ-மாணவிகள் மற்றும் இளைஞர்கள், தங்களின் திறமைகளை தொடர்ந்து வளர்த்துக் கொண்டு, தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்று, காரைக்கால் மாவட்டத்திற்கும், புதுச்சேரி மாநிலத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

காரைக்கால் கார்னிவெல் விழாவை ஒட்டிய கால்பந்து போட்டிகளில் 22 அணிகளும், கபடி போட்டிகளில் 22, பேட்மிண்டன் போட்டிகளில் 122, கைப்பந்து போட்டிகளில் 26 மற்றும், டென்னீஸ் போட்டிகளில் 7 அணிகளும் பங்கேற்றுள்ளன. வரும் 19-ஆம் தேதி வரை இப்போட்டிகள் நடைபெறும் என்றும், அன்றைய தினம் நிறைவு விழாவில், வெற்றியாளர்களுக்கு பரிசளிக்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*புதுச்சேரி-பொங்கல் விழா*

புதுச்சேரியில் சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, பொங்கல் கலை விழா நிகழ்ச்சிகள், கடற்கரை சாலை காந்தி திடலில் நாளையும், நாளை மறுநாளும், மாலை 6 மணி முதல், இரவு 10 மணி வரை நடைபெற உள்ளன. புகழ்பெற்ற பின்னணி பாடகர்கள் நாட்டுப்புற இசைக் கலைஞர்கள் மற்றும் பல்சுவை கலைஞர்கள் நிகழ்ச்சிகளை வழங்க உள்ளதாக சுற்றுலாத் துறை தெரிவித்துள்ளது.

*கும்பமேளா*

உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக் ராஜில் தற்போது நடைபெறும் மகா கும்பமேளாவில் இன்று முதல் அடுத்த மாதம் 24-ஆம் தேதி வரை, கலாச்சார கும்பமேளா என்ற பெயரில் அன்றாடம் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன. இதற்கென கங்கா பந்தல் என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள பிரதான மேடையில், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த புகழ்பெற்ற கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற

உள்ளன. கலாச்சார கும்பமேளாவின் தொடக்க நாளான இன்று பின்னணிப் பாடகர் **சங்கர் மகாதேவன் வழங்கும் சிறப்பு இசை நிகழ்ச்சி** இடம் பெறுகிறது.

*சாலை பாதுகாப்பு*

நாட்டில் சாலை விபத்துக்களால் ஏற்படும் மரணங்களில் 66 சதவிகிதம், 18 முதல் 45 வயதிற்கு உட்பட்ட பிரிவில் நிகழ்வதாக, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். 2030-ல் இந்திய சாலைகள் என்ற தலைப்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, தேசிய சாலை பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர் சாலை பாதுகாப்பு குறித்த உணர்வை மக்களிடையே வலுப்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார். மோட்டார் கார்களின் பின்புற இருக்கையில் அமரும் பயணிகளுக்கும் சீட் பெல்ட் கட்டாயமாக்கப் பட்டுள்ளதாகவும், எலக்ட்ரானிக் பிரேக் உள்ளிட்ட தொழில் நுட்ப வசதிகளுக்கு முக்கியத் துவம் அளிக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

*திறன் பயிற்சி*

இளைஞர்களின் கல்வித் தகுதி மற்றும் திறன்கள் பற்றிய பரஸ்பர அங்கீகாரம் போன்ற மும்முயற்சிகள் மூலம், உலக நாடுகளின் தொழிலாளர் பற்றாக் குறையை சரிபடுத்தும் ஆற்றல் இந்தியாவிற்கு இருப்பதாக மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார்.

இன்று புதுடெல்லியில், எதிர்கால வேலை வாய்ப்புகள் குறித்த மாநாடு ஒன்றில் உரையாற்றிய அவர், திறன் பயிற்சி என்பது, சான்றிதழ்களுக்கு அப்பாற்பட்டு, நடைமுறைத் திறன்களை வழங்குவதாக இருந்தால் தான், இளைஞர்கள் தொழில் துறையின் தேவைகளை நிறைவேற்ற முடியும் என்றும் சுய வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள இயலும் என்றும் கூறினார். நாட்டின் பிரத்யேகத் தேவைகளுக்கு ஏற்ற திறன்களை உருவாக்குவதில், கல்வி நிறுவனங்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் இடையே, வலுவான பிணைப்பு அவசியம் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

*பாதுகாப்பு-ஒப்பந்தம்*

போர்க் கப்பல்களின் தரைப் பரப்பில் இருந்து ஏவப்பட்டு, நடுத்தர தொலைவில் உள்ள இலக்குகளை தாக்கவல்ல ஏவுகணைகளை மொத்தம் 3 ஆயிரம் கோடி ரூபாய் விலையில் வாங்க, பாதுகாப்பு அமைச்சகம், பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்தியாவின் பாதுகாப்பு திறன்களை மேம்படுத்தவும், நவீன பாதுகாப்பு தொழில் நுட்பங்களை உள்நாட்டு அளவிலேயே உருவாக்கவும் தற்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகளில், முக்கிய மைல் கல்லாக இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது. புதிய நடுத்தரத் தொலைவு ஏவுகணைகளை, கடற்படையின் பல்வேறு போர்க் கப்பல்களிலும், எதிர்காலத்தில்

வாங்கப்பட உள்ள கப்பல்களிலும் பயன்படுத்த திட்டமிடப் பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*பதவி ஏற்பு*

முன்னாள் தலைமை ராணுவ தளபதியும், முன்னாள் மத்திய இணை அமைச்சருமான ஜென்ரல் விஜயகுமார் சிங், மிசோரம் மாநிலத்தின் 25-ஆவது ஆளுநராக இன்று பதவி ஏற்றுக் கொண்டார். அய்ஸ்வால் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் குவஹாத்தி உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு விஜய் பிஷ்னோய், திரு வி கே சிங்கிற்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். மிசோரம் முதலமைச்சர் திரு லால்துஹோமா, அவரது அமைச்சரவை சகாக்கள் உள்ளிட்டோர், பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டனர்.

*வினோத் சந்திரன்*

உச்சநீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராக நீதிபதி திரு வினோத் சந்திரன் இன்று பதவி ஏற்றுள்ளார். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சஞ்சீவ் கன்னா, புதிய நீதிபதிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதுவரை பட்னா உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த திரு வினோத் சந்திரன் ஏற்கனவே கேரள உயர்நீதிமன்றத்திலும் நீதிபதியாக பதவி வகித்துள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இஸ்ரோ விஞ்ஞானிகள், Space Docking தொழில் நுட்பம் சார்ந்த SpaDex திட்டத்தின் கீழ், 2 செயற்கை கோள்களை விண்ணில் வைத்தே ஒருங்கிணைத்து, புதிய சாதனை படைத்துள்ளனர்.

நாட்டில் ஸ்டார்ட்-அப் கலாச்சாரத்தை ஊக்குவிக்க, அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மத்திய அரசு ஊழியர்கள் மற்றம் ஓய்வூதியதாரர்களுக்கு, 8-ஆவது சம்பளக் கமிஷன் அமைக்கப்படுவதாக மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது.

காரைக்காலில், 4 நாள் காரைக்கால் கார்னிவெல் விழா மற்றும் மலர் கண்காட்சி, இன்று தொடங்கி உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------